

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டின் தூதர் சைமன் வோங் (Mr. Simon Wong) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங் (Mr. Edgar Pang), அரசியல் தூதர் திருமதி. வைஷ்ணவி வாசுதேவன், செயலாளர் (அரசியல்) ஹர்ஷ்வீர் சிங் சதா (Mr. Harshvir Singh Chadha), சென்னையிலுள்ள ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்தின் மண்டல கடவுச் சீட்டு அலுவலர் டாக்டர் எஸ். விஜயகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் (Agile Robots SE) நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு உள்ளகப்பயிற்சி (Internship) அளிப்பதற்கான கடிதங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்பெயின் மண்ணில் இந்தியாவின் பெருமையை ஒரே சொற்றொடரில்

# ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்று கூறி வரலாற்றில் இடம்பெற்ற கனிமொழி கருணாநிதி!

## இ.யூ.முஸ்லிம் லீக் தேசிய தலைவர் – பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் புகழாரம்!

**திருச்சி, ஜூன் 6-**

**இந்தியாவின் தனிப் பெரும் பெருமையை ஒரே சொற்றொடரில் ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்று கூறி வரலாற்றில் இடம் பெற்றுள்ளார் கனிமொழி கருணாநிதி என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளான ஜூன் 3 அன்று, தமிழக அரசு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கலைஞர் பிறந்த நாள் - செம்மொழி தினம் என்று அறிவித்து தமிழகம் முழுவதும் விழா நடந்தது.

செம்மொழி தினத்தில் கலைஞரின் மகள் கனிமொழி தனது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து, கலைஞர் அவர்களின் நினைவிடம் வந்து மலர் வளையம் சாற்றித் தனது வேட்டலை நிறைவேற்றியிருக்கிறார்.

2025 ஏப்ரல் 22இல் ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பஹல்காம் சுற்றுலாத் தளத்தில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் 26 பேர் தீவிரவாதிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப்பட்ட செய்தி, காட்டுத்தீ போல உலகம் எங்கும் பரவி, மனித உள்ளங்களில் கொதிக்கும் தீச் செய்தியாக வலம் வந்தது என்பது எல்லோரும் அறிந்ததே.

**உலக சரித்திரத்தில் புதிது!**

இந்திய ஒன்றிய அரசு இதற்குப் பதிலடியை உடனடியாகக் கொடுப்பதற்கு ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடத்தியது. மகளின் குங்குமப் பொட்டுக்களை அழித்த தீவிரவாதிகளுக்கு மகளிர் இராணுவத்தைக் கொண்டே இந்திய இராணுவம் இரவோடு இரவாகத் தக்க பதிலடி



கொடுத்து பழிதீர்த்த சரித்திரம் உலக சரித்திரத்தில் புதியது; புதுமையானது; பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

பதிலடி கொடுத்த இந்திய ஒன்றிய அரசு, பாகிஸ்தானின் இராணுவத் தலங்களை அடித்து நொறுக்கியதை உலகின் மற்ற நாடுகள் இந்திய போர் தொடங்கி விட்டது என்று பரப்புரையைத் தொடங்குவதற்கு முன்னரே போர் நிறுத்தத்தை அறிவித்தது; உலகம் இதை உற்றுப் பார்த்தது.

அதே சமயத்தில் இந்திய அரசு, ஏழு பாராளுமன்றக்குழுக்களை அமைத்து, உலக நாடுகள் முழுவதற்கும் சென்று, இந்தியாவின் நடவடிக்கைகள் எதுவும் மனித நேயத்திற்கு மாறுபட்டது இல்லை; இந்தியாவுக்கு நேர்ந்த திடீர் தாக்குதலுக்கு திடீரென பதிலடி கொடுத்து இந்திய மக்களின் மான உணர்ச்சியைக் காப்பாற்றி இருக்கிறோம் என்பது உலக நாடுகள் புரிந்து கொள்ளச் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டன. சரியான முடிவைச் சரியான நேரத்தில் இந்திய அரசு மேற்கொண்டுள்ளது என்று எல்லோருமே வரவேற்புக் கூறினர்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் குழு!**

உலக நாடுகளுக்குச் சென்ற ஏழு நாடாளுமன்ற குழுக்களில் ஒரு குழுவுக்கு தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு மகள் - தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அருமைத் தங்கை கனிமொழி எம்.பி அவர்கள் தலைமை ஏற்றுச் சென்றார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை வகித்துச் சென்ற எம்.பி குழுவில் சமாஜ்வாதி கட்சி ராஜ்குமார் ராய், பாரதீய ஜனதா கட்சி பிரிஜேஷ் சவுதா, ஆம் ஆத்மி கட்சி அசோக் மிட்டல், ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சி பிரேம்சந்த் குப்தா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் குழு ரஷியா, கிரீஸ், சுலோவேனியா, லாத்வியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் சென்று 2025 ஜனவரி 3-ல் நாடு திரும்பியது. கனிமொழி தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவினர், ஸ்பெயின் நாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்து இந்தியத் தூதுக்குழுவின் விவரங்களை விளக்கிக்கூறினர்.

**எதிர்பாராத கேள்வியும் அதே வேகத்தில் வந்த பதிலும்!**

அந்தக் கூட்டத்தில் ஸ்பெயின் நாட்டுப் பிரதிநிதிகள் பல வினாக்களை எழுப்பினர். அவைகளுக்குரிய தெளிவான விளக்கங்கள் அளித்து வரும் போது, திடீரென ஒரு கேள்வி பிறந்தது? எதிர்பாராத இந்தக் கேள்வி வந்த அதே வேகத்தில் அதற்கான பதிலும் வந்தது! அவையினர் அனைவரும் கரவொலி எழுப்பியது அடங்குவதற்கு அதிக நேரமாகி விட்டது!

திடீரென எழுந்துவந்த கேள்வி எது? “இந்தியாவின் தேசிய மொழி” எது?

பதிலடியாகத் திடீரென உத்வேகத்துடன் கனிமொழியிடம் எழுந்தோடி வந்த பதில்;

இந்தியாவின் தேசிய மொழி எது என்றா கேட்கிறீர்கள்; இந்தியாவின் தேசிய மொழி “வேற்றுமையில் ஒற்றுமை” தான்! என்றார் கனிமொழி!

**இந்திய மக்களின் பாராட்டுக்குரியவர்!**

பாருக்குள்ளே நல்ல நாடு - நமது பாரத மணித்திருநாடு. “ஸாரே ஜஹான்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா!” 1985 அக்டோபர் 2-ல் இருந்து 1992 மார்ச்சு 31 வரை இந்தியா முழுவதிலும் எடுக்கப்பட்ட புள்ளிவிவர கணக்குப்படி இந்திய திருநாட்டில் 4,694 சமுதாயங்கள் வாழ்கின்றன. இவர்களின் கலாச்சாரம், நம்பிக்கை, வழிபாடு, மொழி, பழக்கவழக்கம், சடங்கு சம்பிரதாயம், இன முறை வழிவாறு அனைத்தையும் ஒன்று திரட்டிய ‘ஆந்த்ர பாலஜிக்கல் சர்வே இந்தியா’ வெளியிட்ட புள்ளிவிவரம் இது! இந்திய நாடு, ‘யூனிடி இன் டைவர்ஸிடி’ - ‘வேற்றுமையில் ஒன்றுமைக்கு’ உதாரணமாகத் திகழும் பூமி! அதனால்தான் இது புண்ணிய பூமி! அதனால் இது விஸ்வகுரு! அதனால்தான் இது உலகிற்குக் கூறும் முழக்கம்; ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்! யாதும் ஊரே யாவரும் கேளிர்!.

**கனிமொழியின் பேச்சு கலைஞரின் சொல் வீச்சு!**

இந்தியாவின் தனிப் பெரும் பெருமையை ஒரு சொற்றொடரில் - வேற்றுமையில் ஒற்றுமை என்று கூறி வரலாறு படைத்து வரலாற்றில் இடம்பெற்ற கனிமொழி வாழ்த்துக்கும் இந்திய மக்களின் பாராட்டுக்கும் உரியவர்! உண்மையில் கனிமொழியின் பேச்சு கலைஞரின் சொல் வீச்சு தான்!

இவ்வாறு பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சவுதி அரேபியாவில் மறைந்த

# குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவரின் உடலைக் கொண்டு வர நடவடிக்கை!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மேற்கொண்டார்!

*சென்னை, ஜூன் 6-*

தமிழ்நாட்டில் இருந்து சவுதி அரேபியா நாட்டில் பணியாற்றி வந்த கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஜஸ்டின் முத்தையன் என்பவர் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். அவரது உடலை இந்தியாவிற்கு கொண்டுவர அவரது குடும்ப உறுப்பினர்கள் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக அயலக அணித் தலைவருமான கலாநிதி வீராசாமியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களது கோரிக்கையை ஏற்று டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களுக்கு இதுகுறித்து அவசர கடிதம் எழுதினார், மேலும் அமீரக அதிகாரிகளை தொடர்பு கொண்டு இப் பிரச்சினையை எடுத்துரைத்து விரைவில் ஜஸ்டின் முத்தையன் உடலை விரைவில் இந்தியா கொண்டு வர வழிவகை செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

அவரது தொடர் முயற்சியால் மறைந்த ஜஸ்டின் முத்தையன் உடல் அவரது சொந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோட்டில் உள்ள குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப் பட்டது.

உடலைப் பெற்றுக் கொண்ட ஜஸ்டின் முத்தையன் குடும்பத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமிக்கு தொலைபேசி வாயிலாக நெஞ்சார்ந்த தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# மலேசியா - தளபதி பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## இனிப்பு - அறுசுவை உணவு வழங்கல்!

*கோலாலம்பூர், ஜூன் 6-*

மலேசியா தளபதி பேரவை சார்பாக நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மலேசியா ஜொகூர்பாரில் இனிப்பு அறுசுவை உணவுடன் நலஉதவிகள் வழங்கப்பட்டது.

கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மலேசியா தளபதி பேரவை சார்பாக செயலாளர் ஹச்.எம். ஜெய்னுதீன் ஆலோசனையின் படி ஜொகுரில் இர்பான் கலையரசன் தலைமையில் மதிய உணவு இனிப்புகள் நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது. கண்ணையன், பூமிநாதன், சாகுல் ஹமீது, சர்மிளா, ரேவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தைப்பிங்கில் பொருளாளர் ஜே.சிவானந்தம் தலைமையில் காலை உணவு, இனிப்புகள் வழங்கப்பட்டது. அஜய் குமார், பூபாலன், சக்கரவர்த்தி, அப்துல் ஹமீத், சேக் உசேன் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து புருஷோத்தமன் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. அப்துல்லா, மணிகண்டன, ரஹீம், ஜெபஸ்டின் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து செந்தூரள் ஏ.சாதிக் பாட்சா தலைமையில் மதிய உணவு, இனிப்புகள் வழங்கப்பட்டது. கதீஜா பிவி, சபியத்து நிஷா, நசீமா பேகம், பார்வதி, உமேரா ஹசீனா, செல்வம், ஷாஜகான் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சிரம்பானில் எஸ்.வினோத் தலைமையில் துப்புரவு தொழிலாளர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. சேகரன், பிலால் அகமது, சுந்தரம் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஈப்போவில் ஐஸ்.அகமதுல்லா இக்பால் தலைமையில் மதிய உணவு இனிப்புகள் வழங்கப்பட்டது. சுந்தரம், பாலு, அறிவழகன், சஃபி முக்தர் முகமது கலந்து கொண்டனர்.

## அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் -

# ஜூன் 5, 6 இரு நாட்கள் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு!

## பதிவுத்துறைத் தலைவர் அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 6-*

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது வைகாசி மாதத்தில் 05.06.2025 மற்றும் 06.06.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதனை ஏற்று வைகாசி மாதத்தில் 05.06.2025 மற்றும் 06.06.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவுத் துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.



பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்களில் 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.40 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்டத் துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர் எம்.ராஜ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




சென்னை மயிலாப்பூரில் உள்ள கவிக்கோ மன்றத்தில், ஜூன் 3’ஆம் தேதியன்று மன்றம் அமைப்பின் சார்பில் “தமிழ்நாடு: முயற்சியும் முன்னேற்றமும்” என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் நிகழ்ச்சியில் மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் (ஓய்வு), கவிஞரும் திரைப்பட பாடலாசிரியருமான யுகபாரதி மற்றும் மருத்துவரும், சமூக செயற்பாட்டாளருமான திருமிகு.ஷர்மிளா, திராவிட இயக்க எழுத்தாளரும் மூத்த பத்திரிகையாளருமான கோவி.லெனின் ஆகியோர் பங்கேற்று தமிழ்நாட்டின் வளர்ச்சியை பற்றி உரையாற்றினர். சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் மனித உரிமைகள் குறித்தும், தமிழ்நாட்டின் வளர்ச்சி, அதன் மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்ட இந்த கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.